A/C/IN/6026/2019

நினைவூட்டல் - 4

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

H/SCH/2019

தேதி: 12.12.2019

இறுதி சுற்றறிக்கை

பொருள்: ஆதிதிராவிட பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவ/மாணவியர்கள் 2019-2020 ஆம் கல்வி ஆண்டு போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் மற்றும் உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை - பெறுவதற்குறிய விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது தொடர்பாக.

பார்வை: சுற்றறிக்கை - 1, நாள்: 22.07.2019
சுற்றறிக்கை - 2, நாள்: 29.08.2019
சுற்றறிக்கை - 3, நாள்: 12.11.2019

……………

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் SC/ST/SCC மாணவ மாணவியர்களில் 92 TNER கல்வி கட்டண சலுகை மற்றும் விடுதிக் கட்டணச் சலுகை பெற தங்களது கல்வி உதவித்தொகை விண்ணப்பம் மற்றும் விடுதி மாணவர்களுக்கான உயர் கல்வி சிறப்பு உதவித்தொகை விண்ணப்பங்களை மூன்று முறை சுற்றறிக்கை அனுப்பியும் இதுநாள்வரை சமர்பிக்காத மாணாக்கர்கள் இதனையே இறுதி வாய்ப்பாக கருதி 31.12.2019 செவ்வாய்க்கிழமைக்குள் ‘H’ பிரிவில் சமர்ப்பிக்கும்படி கோரப்படுகிறது. விண்ணப்பம் சமர்பிக்க தவறும் மாணவ/மாணவியர்கள் பல்கலைக்கழகத்திற்கு கட்ட வேண்டிய, கல்வி/தேர்வு/விடுதி கட்டணம் முழுவதையும் தாங்களே செலுத்த நேரிடும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விடுதியில் தங்கி பயிலும் மாணவ/மாணவியர்களின் கவனத்திற்கு:

ஆதிதிராவிடர் நலத்துறை வழங்கியுள்ள மாணவர்களின் தகவல் படிவத்தின் நகல் முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ளது. அந்த படிவத்தினை விடுதி மூலமாக பெற்று பூர்த்தி செய்து விடுதி அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். மேலும், விடுதியில் உள்ள **உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை தொடர்பான அலுவலர்கள்,** மாணாக்கர்களிடம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பத்தில் உள்ள தகவல்களை **XL-ல் ஆங்கிலத்தில் ‘Times New Roman’** எழுத்தை பயன்படுத்தி கணினி மூலம் தயார் செய்வதுடன் **(Pen Drive-ல் காப்பி செய்து) annamalaischolar@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமும் ‘H’ பிரிவில் சமர்ப்பிக்க ஆவண செய்யுமாறு முன்பே கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக இதுநாள்வரை மூன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு இச்சுற்றறிக்கையை இறுதி வாய்ப்பாக கருதி **31.12.2019-க்குள்** சம்மந்தப்பட்ட விடுதி அலுவலர்கள் உடனடியாக இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள கோரப்படுகிறது. எக்காரணத்தை கொண்டும் விண்ணப்பம் சமர்ப்பிக்க இறுதி தேதி நீட்டிக்கப்படமாட்டாது என்பதையும் அறிவுறுத்தப்படுகிறது.

நி கிருஷ்ண மோகன்
பதிவாளர் (பொ)

2/3

12/12/19.

பெறுதல்

1. அனைத்து புல முதல்வர்கள்
2. அனைத்து துறை தலைவர்கள்
   (இச்சுற்றறிக்கையினை அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் வகுப்புகளில் தெரிவிக்க கோரப்படுகிறது)
3. விடுதி ஒருங்கிணைப்பாளர்.
4. அனைத்து விடுதி காப்பாளர்கள்
5. சுற்றறிக்கையை அறிவிப்பு பலகை வாயிலாக மாணவ/மாணவியர்களுக்கு தெரிவிக்க வலியுறுத்தப்படுகிறது.

நகல்

1. துணைவேந்தரின் நேர்முக உதவியாளர்.
2. பதிவாளரின் நேர்முக உதவியாளர்
3. அலுவலகக் கோப்பு